**DEPOSITION OF WITNESS**

**( Rule-42 C.R.P)**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, LALGUDI.**

| | | |
|---|---|---|
| **Calendar** | : | |
| **Miscellaneous** | : | **Case No.CC 71 of 2018** |
| **Preliminary Register** | : | |
| **Sessions** | : | |

| | | |
|---|---|---|
| **Deposition of Witness for** | **Prosecution :** | **PW7** |
| | **Defence :** | |
| | **Court :** | |

**Name**/பெயர் : **ஜெயபிரகாஷ்**

**Father's/ Husband Name :** **மதியேந்திரன்**
தகப்பனார்/கணவர்பெயர்

**Village**/ கிராமம் :

**Taluk**/ வட்டம் :

**Caste** / இனம் :

**Calling**/ வேலை :

**Religion**/ மதம் :

**Age**/ வயது :

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 05.04.2022**

<u>முதல் விசாரணை</u>

**நான் கொத்தமங்கலத்தில் குடியிருந்து வருகிறேன். நான் தற்போது தனியார் கம்பெனியில் வேலை பார்த்த வருகிறேன். என்னிடம் காட்டப்படும் 22.04.2018 ம் தேதியிட்ட ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அது அ.சா.ஆ.4 ஆக குறியீடு**

செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அது அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 22.04.2018 அன்று நானும் சந்திரசேகரனும் அன்பில் மாரியம்மன் கோவிலுக்கு சாமிகும்பிட சென்ற போது இந்த வழக்கின் எதிரி டென்னிஸ் என்பவரை கைது செய்துள்ளதாக இலால்குடி காவல் ஆய்வாளர் எங்களுக்கு தகவல் தெரிவித்து கொள்ளிடம் ஆற்று கரைக்கு வருமாறு அழைத்ததன் பேரில் நானும் சந்திரசேகரனும் அங்கு சென்றோம். அங்கு டென்னிஸ் என்பவர் இருந்தார். எதிரி டென்னிஸ் எங்கள் முன்பு கொள்ளிடம் ஆற்று கரையில் உள்ள புதரில் இருந்து ஒரு பிரவுன் கலர் பேக்கினை எடுத்து ஆஜர் செய்தார். அந்த பேக்கில் ரூபாய் 90,000/- பணம் இருந்தது. அதற்காக என்னிடமும் சந்திரசேகரனிடமும் சாட்சி கையொப்பம் பெற்றார்கள். எதிரி டென்னிஸை இப்போது பார்த்தாலும் என்னால் அடையாளம் காட்ட இயலும். (எதிரி டென்னிஸ் இன்று நீதிமன்றத்தில் ஆஜர் ஆகவில்லை) எதிரி டென்னிஸ் ஆஜர் செய்த பிரவுன் கலர் பேக்கையும் பணத்தினையும் என்னால் அடையாளம் காட்ட இயலும். என்னிடம் காட்டப்படும் (ஆர்.பி.எண்.209/2018) புகைப்படங்களில் உள்ள பணத்தாள்களை தான் போலிசார் எங்கள் முன்பு கைப்பற்றினார்கள். வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர்கள் ஆஜராகி இருந்தும் குறுக்குவிசாரணை செய்யப்படவில்லை.

**DEPOSITION OF WITNESS**

**( Rule-42 C.R.P)**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, LALGUDI.**

| | | |
|---|---|---|
| **Calendar** | : | |
| **Miscellaneous** | : | **Case No.CC 71 of 2018** |
| **Preliminary Register** | : | |
| **Sessions** | : | |

| | | |
|---|---|---|
| **Deposition of Witness for** | **Prosecution :** | **PW8** |
| | **Defence :** | |
| | **Court :** | |

**Name**/பெயர் : **சந்திரசேகர்**

**Father's/ Husband Name : அமிர்தலிங்கம்**
தகப்பனார்/கணவர்பெயர்

**Village**/ கிராமம் :

**Taluk**/ வட்டம் :

**Caste** / இனம் :

**Calling**/ வேலை :

**Religion**/ மதம் :

**Age**/ வயது :

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 05.04.2022**

<u>முதல் விசாரணை</u>

**நான் தற்போது மேலவீதி, இலால்குடியில் குடியிருந்து வருகிறேன். நான் தற்போது தனியார் நிறுவனத்தில் வேலை பார்த்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் 22.04.2018 ம் தேதியிட்ட ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான்.**

அது அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அது அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 22.04.2018 அன்று நானும் ஜெயபிரகாசும் அன்பில் மாரியம்மன் கோவிலுக்கு சாமிகும்பிட சென்ற போது கோவிலுக்கு அருகில் உள்ள சாலையில் இருந்த போது இலால்குடி போலிசார் எதிரி டென்னிஸ் என்பவரிடம் பேக்கினையும் பணத்தையும் கைப்பற்றியதாக கூறி காவல் நிலையத்தில் வைத்து என்னிடம் சாட்சி கையொப்பம் பெற்றார்கள். என்னிடம் காட்டப்படும் (ஆர்.பி.எண்.209/2018) புகைப்படங்களில் உள்ள பணத்தாள்களை தான் போலிசார் கைப்பற்றினார்கள். அந்த சமயத்தில் எதிரி டென்னிஸ் என்பவரை நான் பார்க்கவில்லை. வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர்கள் ஆஜராகி இருந்தும் குறுக்குவிசாரணை செய்யப்படவில்லை.